கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : செல்வி.பவித்ரா. G, எல்.எல்.எம்.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**I.A.No.8/2026 in OS 224/2017**

1. வர்க்கீஸ் (இறப்பு) ... 1ம் வாதி

2. அனுஷ்யா வர்க்கீஸ் தனது அதிகார முகவர்

சுடலைமணி மூலம்

3. சிந்தியா வர்க்கீஸ் தனது அதிகார முகவர்

சுடலைமணி மூலம்

4. சாய் ஆனந்த் வர்க்கீஸ் தனதுஅதிகார முகவர்

சுடலைமணி மூலம்

.... 2 முதல் 4 மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள்

**/எதிர்/**

மன்மதராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதி

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக 02.06.2026 அன்று வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ராஜாசிங் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.F.X.யூஜின் அவர்களும் மற்றும் திரு.சுரேஷ் அவர்களும் ஆஜராகியும், மொழிந்த வாதுரைகளைக் கேட்டறிந்தும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும்,

இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 படி, அசல் வழக்கில் வாதி தரப்பில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை வரவழைப்பு செய்து குறியீடு செய்யும் வகைக்கு வாதி தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (Re – open) செய்து, வா.சா.1 ஐ (Re – call) மீண்டும் அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்** :–

அசல் வழக்கானது, வாதியால் பிரதிவாதிக்கு எதிராக பிராது தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் வாதி தரப்பு வாதுரைக்காக அசல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், 2 முதல் 4 வாதிகள் தரப்பில் தனக்கு வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணம் தனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்யத் தவறிவிட்டது என்றும், ஆகவே மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் குறியீடு செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது என்றும், மேலும் இவ்வழக்கில் வாதி தரப்பு சான்றாவணம் எண் வா.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள பனவடலிசத்திரம் காவல்நிலைய புகார்மனு ரசீதுக்கான புகார் மனு மற்றும் வாக்குமூலங்களை மேற்படி காவல்நிலையத்திலிருந்து வரவழைப்பு செய்து குறியீடு செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது என்றும், மேற்படி

ஆவணங்கள் வாதியின் தவறுதலால் குறியீடு செய்யப்படாமல் போய்விட்டது என்றும், மேலும் ஆவணங்கள் மனுதாரின் வழக்கை ருசு செய்யக்கூடிய முக்கிய ஆவணங்கள் என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்ட தவறல்ல என்றும், ஆகவே வழக்கில் வாதி தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (Re – open) செய்து வாதி தரப்பில் மேற்படி ஆவணங்களை வரவழைப்பு செய்ய வேண்டியதும் குறியீடு செய்ய வேண்டியதும் நீதியின் பொருட்டு அவசியமாயிருக்கிறது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் குறிப்பிடும் வா.சா.ஆ.3 கொண்ட புகார் மனு ரசீதுக்குரிய கோப்புகளை இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டுமென்றால் உரிமையில் விசாரணை முறை விதிகள் 76ன் படி தனியாக மனுத்தாக்கல் செய்து அதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி, அந்த மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் மேற்கண்ட ஆவணங்களை வரவழைக்க இயலும் என்றும், ஆனால் மனுதாரர்கள் அவ்விதமான எந்த மனுவினையும் தாக்கல் செய்யாமல், நேரடியாக ஆவணங்களை வரவழைக்க வேண்டுமெனக் கோரி ரீ ஒப்பன், ரீகால் மனுக்களை மட்டும் தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதார்களின் மனு சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், மேலும் காவல்நிலையத்தில் உள்ள புகார் மனு கோப்புகள், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாத பட்சத்தில் அது மூன்று ஆண்டுகளுக்குள் அழிக்கப்பட்டுவிடக்கூடும் என்றும், ஆனால் மனுதார்கள் 2013ம்

ஆண்டுக்குரிய கோப்புகளை, 13 ஆண்டுகள் கழித்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ள நிலையில் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதில்லை என்றும், மேலும் மனுதாரர்கள் தங்களுக்குரிய பொது அதிகார ஆவணத்தை குறியீடு செய்ய விடுபட்டுவிட்டது என கூறியுள்ளது தவறானது ஆகும் என்றும், வா.சா.ஆ.1 ஐ குறுக்கு விசாரணை செய்த காலத்திலேயே மேற்கண்ட ஆவணம் தாக்கல் செய்யப்படாதது குறித்து இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டு கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளது என்றும் எனவே அந்த காலகட்டத்திலேயே மனுதாரர்களுக்கு அது தொடர்பான சங்கதிகள் நன்கு தெரிந்திருந்தும், மனுதாரர்கள் மிகவும் காலப்பிற்பாடாக இம்மனுவினைத் தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேலும் அசல் வழக்கில் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், வழக்கில் முடிவு ஏற்பட்டுவிடக்கூடாதென்ற கெட்ட நோக்கில், இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களுக்கு இம்மனுவில் எவ்வித பரிகாரங்களும் கிடைக்கக்கூடியதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனு, அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலிக்கப்பட்டது. உபயத் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. **தீர்வு** :-

7.1. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்ததில், அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால், பிரதிவாதி/எதிர்மனுதாரருக்கு எதிராக பிராது தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர ஏவுக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், அசல் வழக்கில் வாதி தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில், பனவடலிசத்திரம் காவல்நிலைய புகார் மனு ரசீது எண்.137/2013 ற்கான புகார் மனு நகல், அந்த புகாரின் விசாரணையில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் அளித்த வாக்குமூலங்களின் நகல் மற்றும் மனுதாரர்கள்/வாதிகள் அதிகார முகவர் சுடலைமணிக்கு பிறப்பித்துக்கொடுத்த பொதுஅதிகார ஆவணம் ஆகியவற்றை வா.சா.1 ன் மூலம் வாதிகள் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் வகைக்கு வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க (Re – call) உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

7.2. மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கானது, வாதியால் பிரதிவாதிக்கு எதிராக பிராது தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் வாதி தரப்பு வாதுரைக்காக அசல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், 2 முதல் 4 வாதிகள் தரப்பில் தனக்கு வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணம் தனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்யத் தவறிவிட்டது என்றும், ஆகவே மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் குறியீடு செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது என்றும், மேலும் இவ்வழக்கில் வாதி தரப்பு

சான்றாவணம் எண் வா.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள பனவடலிசத்திரம் காவல்நிலைய புகார்மனு ரசீதுக்கான புகார் மனு மற்றும் வாக்குமூலங்களை மேற்படி காவல்நிலையத்திலிருந்து வரவழைப்பு செய்து குறியீடு செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது என்றும், மேற்படி ஆவணங்கள் வாதியின் தவறுதலால் குறியீடு செய்யப்படாமல் போய்விட்டது என்றும், மேலும் ஆவணங்கள் மனுதாரின் வழக்கை ருசு செய்யக்கூடிய முக்கிய ஆவணங்கள் என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்ட தவறல்ல என்றும், ஆகவே வழக்கில் வாதி தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (Re – open) செய்து வாதி தரப்பில் மேற்படி ஆவணங்களை வரவழைப்பு செய்ய வேண்டியதும் குறியீடு செய்ய வேண்டியதும் நீதியின் பொருட்டு அவசியமாயிருக்கிறது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

7.3. எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் குறிப்பிடும் வா.சா.ஆ.3 கொண்ட புகார் மனு ரசீதுக்குரிய கோப்புகளை இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டுமென்றால் உரிமையில் விசாரணை முறை விதிகள் 76ன் படி தனியாக மனுத்தாக்கல் செய்து அதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி, அந்த மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் மேற்கண்ட ஆவணங்களை வரவழைக்க இயலும் என்றும், ஆனால் மனுதாரர்கள் அவ்விதமான எந்த மனுவினையும் தாக்கல் செய்யாமல், நேரடியாக ஆவணங்களை வரவழைக்க வேண்டுமெனக் கோரி ரீ ஓப்பன், ரீகால் மனுக்களை மட்டும் தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதார்களின் மனு சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், மேலும்

காவல்நிலையத்தில் உள்ள புகார் மனு கோப்புகள், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாத பட்சத்தில் அது மூன்று ஆண்டுகளுக்குள் அழிக்கப்பட்டுவிடக்கூடும் என்றும், ஆனால் மனுதார்கள் 2013ம் ஆண்டுக்குரிய கோப்புகளை, 13 ஆண்டுகள் கழித்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ள நிலையில் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதில்லை என்றும், மேலும் மனுதாரர்கள் தங்களுக்குரிய பொது அதிகார ஆவணத்தை குறியீடு செய்ய விடுபட்டுவிட்டது என கூறியுள்ளது தவறானது ஆகும் என்றும், வா.சா.ஆ.1 ஐ குறுக்கு விசாரணை செய்த காலத்திலேயே மேற்கண்ட ஆவணம் தாக்கல் செய்யப்படாதது குறித்து இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டு கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளது என்றும் எனவே அந்த காலகட்டத்திலேயே மனுதாரர்களுக்கு அது தொடர்பான சங்கதிகள் நன்கு தெரிந்திருந்தும், மனுதாரர்கள் மிகவும் காலப்பிற்பாடாக இம்மனுவினைத் தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேலும் அசல் வழக்கில் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், வழக்கில் முடிவு ஏற்பட்டுவிடக்கூடாதென்ற கெட்ட நோக்கில், இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களுக்கு இம்மனுவில் எவ்வித பரிகாரங்களும் கிடைக்கக்கூடியதில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

7.4. இரு தரப்பு வழக்குரை மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலித்ததில், பனவடலிசத்திரம் காவல்நிலைய புகார் மனு ரசீது எண்.137/2013ற்கான புகார் மனு நகல், அந்த புகாரின் விசாரணையில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் அளித்த

வாக்குமூலங்களின் நகல் ஆகியவற்றை பனவடலிசத்திரம் காவல்நிலையத்திலிருந்து வரவழைக்கக்கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது வ.வி.எண்.9/2026 ஆக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு 03.07.2026 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

7.5. வழக்கு ஆவணங்களை மேலும் பரிசீலனை செய்ததில், 1ம் வாதி வர்க்கீஸ் இறந்ததற்குப் பிறகு அவரது வாரிசுகளாக 2 முதல் 4 வாதிகளைக் கட்சி சேர்க்க மனுத்தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் 2 முதல் 4 வாதிகளுக்கு அதிகார முகவராக சுடலைமணி நியமிக்கப்பட்டதாகத் தெரிவித்து, அந்த அதிகார முகவர் மூலம் 2 முதல் 4 வாதிகள் வழக்கை நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவானது வ.வி.எண்.2/2023 ஆக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்பதையும், அம்மனுவுடன் 2 முதல் 4 வாதிகள் சுடலைமணியை இவ்வழக்கை அவர்கள் தரப்பில் நடத்திக்கொள்ளும் வகைக்கு அதிகார முகவராக நியமித்து பிறப்பித்த தனிஅதிகார ஆவணத்தை தாக்கல் செய்திருந்தார்கள் என்பதையும், மேற்கண்ட தனி அதிகார ஆவணத்தை பரிசீலித்தும், இருதரப்பு எடுத்துரைப்புகளை கேட்டபிறகும், வ.வி.எண்.2/2023 மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்தது என்பதையும், அதனடிப்படையில் தான் சுடலைமணி 2 முதல் 4 வாதிகளுக்கு அதிகார முகவர் என்ற நிலையில், வா.சா.1 ஆக அசல் வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. 2 முதல் 4 வாதிகள் சுடலைமணிக்கு பிறப்பித்துக் கொடுத்த தனி அதிகார ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்பதை கருத்தில் கொண்டும், அந்த ஆவணத்தை

பரிசீலித்தபிறகு தான் வ.வி.எண்.2/2023 மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது என்பதை கருத்தில் கொண்டும் அதனடிப்படையில் தான் சுடலைமணி இந்த வழக்கில் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்பதை கருத்தில் கொண்டும், மேற்கூறிய வழக்கு நடவடிக்கைகளிலிருந்தே 2 முதல் 4 வாதிகள் சுடலைமணிக்கு தனி அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளது புலனாகிறது என்றும், அதனால் மேற்கண்ட தனி அதிகார ஆவணத்தை வா.சா.1ன் மூலம் வாதிகள் தரப்பு சான்றாவணமாக தனியாக குறியீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட விவாதங்களிலிருந்து பனவடலிசத்திரம் காவல்நிலைய புகார் மனு ரசீது எண்.137/2013ற்கான புகார் மனு நகல், அந்த புகாரின் விசாரணையில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் அளித்த வாக்குமூலங்களின் நகல் ஆகிய ஆவணங்களை வா.சா.1 மூலமாக குறியீடு செய்ய இயலாது என்பதும், சுடலைமணிக்கு 2 முதல் 4 வாதிகள் பிறப்பித்துக் கொடுத்த தனி அதிகார ஆவணத்தை வா.சா.1ன் மூலமாக குறியீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதும் புலனாகிறது. எனவே மேற்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் பொருட்டு வா.சா.1ஐ மீண்டும் அழைக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்று கருதி இம்மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 03 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.07.03 15:52:43 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி ,

சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:–** இல்லை.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.07.03 15:52:48 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

**கூ.மா.உ.நீ., சங்கரன்கோவில்,**

I.A.No.8/2026

in

O.S.No224/2017

உத்தரவு (Draft / Fair)

நாள் : 03.07.2026